மதுராந்தகம் நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை முன்னிலை – திரு.P.ஆண்டவன்.பி.பி.எம்.,

****

ந.க.எண்.916/2023/எப்1 நாள்.06.09.2024

பொருள்–	மனைப்பிரிவு – மதுராந்தகம் நகராட்சி – மதுராந்தகம் கிராமம் சர்வே வார்டு–"A" பிளாக் எண்–76 நகரளவை எண் 6/3 & 8/4 ல் பரப்பளவு 4.95 ஏக்கர்– ம.வ./ந.ஊ.து.இ (செ.மா) எண்.80/2023– மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது – மனைப்பிரிவு அனுமதி வழங்குவது தொடர்பாக.
பார்வை–	1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் எண். ம.வ./ந.ஊ.து.இ (செ.மா) எண். 80/2023 2. தானப்பத்திர எண்.1680/2023 நாள்.18.04.2023 3. மனுதாரரின் தேதி.12.07.2024 4. நகர மன்ற தீர்மான எண்.670 நாள்.06.09.2024.

<u>உத்தரவு</u>

மதுராந்தகம் நகராட்சிக்குட்பட்ட மதுராந்தகம் கிராமம் வார்டு "A" பிளாக் எண்–76 நகரளவை எண் 6/3 & 8/4 ல் அமைந்துள்ள 4.95 ஏக்கர் நிலத்தில் மனைப்பிரிவு ஏற்ப்படுத்த தாங்கள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களுக்கு மனுசெய்ததின் பெயரில் பார்வை 1 ல் கண்டுள்ள தொழில்நுட்ப அனுமதியில் 115 மனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மின் வாரியத்துக்கான உபயோக பகுதி பொது உபயோக பகுதி பூங்கா மற்றும் சாலைகளை பார்வை 2 ல் கண்டுள்ள தானப்பத்திரம் மூலம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்துள்ளீர்.

தாங்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தி அதன் இரசீதுகளின் நகல்கள் பார்வை 3 ல் கண்டுள்ள தங்களின் கடிதத்தின் மூலம் சமர்ப்பித்துள்ளீர் அதன் விவரம் அனுமதி கட்டணம் ரூ.2,00,000/– (ReceiptNo.019/02/7/24-25/0001386), ஆய்வுக்கட்டணம் ரூ.45,000/– (ReceiptNo.019/02/7/24-25/0001380), வளர்ச்சி கட்டணம் ரூ.1,50,000/–(ReceiptNo.019/02/7/24-25/0001381), கூர்ஆய்வு கட்டணம் ரூ.45,000/– (ReceiptNo.019/02/7/24-25/0001382), சேவை கட்டணம் ரூ.60,000/– (ReceiptNo.019/02/7/24-25/0001383), கொடி நாள் ரூ.1,000/– (ReceiptNo.019/02/7/24-25/0001385), இதர கட்டணம் ரூ.1,45,000/–(ReceiptNo.019/02/7/24-25/0001384), ஆகியவை சேர்த்து ரூ.6,46,000/–யினை ஆணையர் மதுராந்தகம் நகராட்சி என்ற பெயரில் Federal Bank சென்னை கிளை DD No.313490 நாள்.11.07.2024 மற்றும் வைப்புத் தொகை கட்டணம் ரூ5,00,000/– (ReceiptNo.019/02/7/24-25/0001379)யினை DD No.313489 நாள்.11.07.2024 Federal Bank சென்னை கிளையில் வழங்கப்பட்டது.

Scanned with CamScanner

பார்வை 4 ல் கண்டுள்ள நகர மன்றதீர்மான எண்.670 நாள்.06.09.2024ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதியின் பேரில் மனைப்பிரிவுக்கு நகர் மன்றம் அனுமதி வழங்கியுள்ளதனை தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையாளர்(பொறு)
மதுராந்தகம் நகராட்சி

பெறுநர்

திரு. ராகுல் குமார் s/o தீபக்சந்ஜெயின்,
எண். 43, சுவாமி தெரு,
சூலை, சென்னை– 600112.

நகல்:– நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்.
செங்கல்பட்டு.

இணைப்பு– நிபந்தனைகள்.

Scanned with CamScanner